மில்க்வைற் இலவச வெளியீடு:

உ

சிவமயம்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்

எழுதிய

# நீதி வாக்கியங்கள்

வெளியிடுவோர்;

யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத்

தொழிலக அதிபர்,

சிவநெறிப் புரவலர், சிவதர்ம வள்ளல், சிவத்தமிழ்ச் செல்வர், சிவபுரத்தரசர், பெருஞ்சுட்டுடையார்,

பூவுலக கற்பகதரு நாயகர்,

சமாதான நீதவான்

## திரு. க. கனகராசா அவர்கள்

''திருஆலவாய்''

யாழ்ப்பாணம். 5-12-74

உ

## அன்பான வேண்டுகோள்

மில்க்வைற் உற்பத்திப் பொருள்களுக்கு நீங்கள் அமோகமாக ஆதரவளித்தால் நாங்கள் இத்தகைய இலவச வெளியீடுகளைப் பிரசுரித்து அன்பளிப்புச் செய்ய உதவியாகும்.

பார்த்து வாங்குங்கள் **"மில்க்வைற்"**

---

இப் புத்தகத்தை வாசித்த
பின்னர் தயவுசெய்து
பிறருக்குங் கொடுத்து
உதவுங்கள்.

---

உ

# நாவலர் தின நினைவு வெளியீடு



## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்

1822 – 1879

நாவலரைப்போல நமக்கு ஆளில்லை

## "நாவலர் நாமத்தை நாம் மறக்கமாட்டோம்"

ஆடும் தில்லை யம்பலவன்
　　அடிகள் மறவா அன்புடையோன்,
பீடு பெறவே செந்தமிழைப்
　　பேணி வளர்த்த பெரும்புலவன்,
நீடு சைவம் இவ்வுலகில்
　　நிலவச் செய்த குருநாதன்
நாடு புகழும் ஆறுமுக
　　நாவ லன்பேர் மறவோமே.

— கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை

உ
சிவமயம்

# நாவலர் நீதி வாக்கியங்கள்

1 கோவிலுக்குப் போ
2 கடவுளை வணங்கு
3 குருவை வழிபடு
4 புண்ணியஞ் செய்
5 உண்மை பேசு
6 இரக்கம் நல்லது
7 பொறுமை ஆகாது
8 கோபம் பொல்லாதது
9 பாவத்தை நீக்கு
10 கள்ளுக் குடியாதே
11 ஒருவரையும் நிந்தியாதே
12 சூது ஆடாதே
13 களவு செய்யாதே
14 பொய் சொல்லாதே
15 பொல்லாதவருடன் கூடாதே
16 உயிர்களைக் கொல்லாதே

1. கடவுள் ஒருவர் இருக்கிறார்
2. கடவுள் எங்கும் இருக்கிறார்
3. கடவுள் எல்லாம் அறிவார்
4. கடவுள் எல்லாம் வல்லவர்
5. கடவுள் இரக்கம் உடையவர்
6. கடவுள் நம்மைக் காக்கிறார்
7. கடவுளை எந்நாளும் வணங்கு
8. பிதாமாதாவை வழிபடு
9. உபாத்தியாயருக்கு அமைந்து நட
10. கல்வியே அழியாத செல்வம்
11. கடவுளை ஒருகாலமும் மறவாதே
12. குருவாக்கைத் தட்டாதே
13. வீண்நேரம் போக்காதே
14. புத்தகத்தைக் கிழித்துப் போடாதே
15. அன்னத்தைச் சிந்தாதே
16. அடிக்கடி தண்ணீர் பருகாதே

1 எவர்களோடும் இனிய வார்த்தை பேசு
2 எல்லார் மேலும் அன்புள்ளவனாய் இரு
3 இரப்பவர்களுக்கு ஏதேனும் கொடு
4 பெரியவர்களைக் கண்டால் வணங்கு
5 வறியவர்களுக்கு ஒருபிடி அன்னங் கொடு
6 மனிதருக்கு மேலாகிய ஆபரணம் அறிவு
7 எவர் ஒருவருக்கும் தீங்கு நினையாதே
8 வீண் வார்த்தை ஒருபொழுதும் பேசாதே
9 பிறருடைய பொருளை இச்சியாதே
10 கெட்ட வார்த்தை ஒருபொழுதும் பேசாதே
11 ஒருபொழுதும் பொய்ச் சாட்சியம் சொல்லாதே

1 நித்தமும் விடியுமுன் நித்திரைவிட்டு எழுந்துவிடு

2 நித்திரைவிட்டு எழுந்த உடனே கடவுளைத் தோத்திரம் பண்ணு

3 புத்தகத்தை எடுத்துப் புதுப் பாடத்தையும் பழம் பாடங்களையும் படி

4 வீட்டிலே கிடைத்ததைப் போசனம் பண்ணு

5 போசனம் முடிந்தபின்பே தாகத்துக்கு உட்கொள்ளு

6 பகலிலும் விடியற் காலத்திலும் நித்திரை பண்ணாதே

7 நெடுநேரம் சலத்திலே நில்லாதே

8 அழுக்கு வேட்டியாவது, ஈரவேட்டியாவது தரியாதே

9 அழுகின பழங்களைப் புசியாதே

10 அடிக்கடி போசனம் பண்ணாதே

11 புகையிலைச் சுருட்டுப் பிடியாதே

12 சுவரையாவது குறட்டையாவது கீருதே
13 படிக்கிற நேரத்தில் விளையாடாதே
14 மாடுகள் குதிரைகளுக்குக் கிட்டப் போகாதே
15 கெட்ட பிள்ளைகளுடன் கூடி விளையாடாதே
16 எந்தப் பிராணிக்கும் துன்பஞ் செய்யாதே
17 பெரியோர்கள் எதிரே சிரியாதே
18 உனக்கு மூத்தவர்களைப் பெயர்சொல்லி அழைக்காதே
19 எவரிடத்தாவது இடக்கையினுலே கொடுக்கல் வாங்கல் செய்யாதே

1 இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

2 இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால், நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்.

3 ஈசுர பத்தியும் நல்லொழுக்கமும் உள்ள பிதா மாதாக்களை உடைமையே பெரும் பாக்கியம்.

4 தீவிரமாயேனும் மந்தமாயேனும், நல்வினை இன்பத்தையும், தீவினை துன்பத்தையும் வருவிக்கும்.

5 தங்கள் நயத்தின் பொருட்டு மாத்திரமன்றி, பிறர் நயத்தின் பொருட்டும் பிரயாசப் படுகிறவர்களே உத்தமர்

6 செல்வம் உள்ள மூடரினும் வறுமை உள்ள வித்துவான்களே எங்கும் நன்கு மதிக்கப்படுவார்கள்.

7 செல்வம் அழிவு உள்ளது ஆதலால், அதனால் வரும் பெருமையும் அழிவுள்ளது. கல்வி அழிவில்லாதது ஆதலால், அதனால் வரும் பெருமையும் அழிவில்லாதது.

8 கல்வியறிவால் ஆகிய மூப்பே மூப்பு; ஆதலால் அதனை உடையவர்களே யாவராலும் வணங்கப்படத் தக்கவர்கள்.

9 நீ பிறர்க்குச் செய்த உபகாரங்களை நீயே எடுத்துப் புகழ்தல் தக்கது அன்று.

10 நீ பிறருக்கு ஒன்றை வாக்குத்தத்தம் செய்யுமுன், அது உன்னால் இயலுமோ இயலாதோ என ஆராய்ந்துகொள்.

11 நீ உன் உடம்பை வளர்த்தற்குப் பிறிதொன்றின் உடம்பை உண்பையாயின், எவ்வகையால் அருளை ஆளுவை?

12 செல்வம் முதலியவற்றினாலே செருக்கு அடைந்து, முன் உன்னோடு பயின்ற சிநேகிதரை மறந்துவிடாதே.

13 பாவத்துக்கு அஞ்சிப் பொருள் சம்பாதித்து, பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பங்கிட்டு, நீயும் உண்ணு.

14 பொய் முதலிய பாவம் கலவாமையால் வேளாண்மைக்கு நிகராவது ஒன்றும் இல்லை.

15 நன்மை தீமையைப் பகுத்தறியும் அறிவை மயக்கி அது பயக்கும் ஒழுக்கத்தைக் கெடுத்தலால், கள்ளுண்டலே பாவத்துக்கெல்லாம் தலையாயது.

16 அருட்செல்வமே அறிவுடையோரிடத்து மாத்திரம் உளதாகி, எவ்வுயிர்களாலும் நன்கு மதிக்கப்படும் பெருஞ்செல்வம்.

17 நன்மை செய்தற்குச் சமயம் வாய்க்கும்பொழுது செய்யாதொழிவையாகில், பின் ஒரு காலத்தில் அது வாய்ப்பது அரிது.

18 நாம் சிறு துன்பங்களைச் சகிக்கப் பயிலல் வேண்டும். பயில்வோமாகில், மேலே பெருந்துன்பங்களையும் சகிக்கவல்லவர் ஆவோம்.

19 வருவாய்க்குத் தக்க வாழ்க்கை இல்லாதபொழுது செல்வராவார் ஒருவருமிலர்; அது உள்ளபொழுது வறியராவார் மிக அரியர்.

20 நாம் செய்த குற்றங்களை நாமே வெளிப்படுத்திப் பச்சாத்தாபப் படுவோமாயின், அறிவினல் மூத்த பெரியோர்கள் நம் மேல் இரங்கி, அவைகளைப் பொறுத்துக் கொள்வார்கள்.

21 அடக்கம் உடைமை பாலியர்களுக்குச் சிறந்த ஆபரணம்.

22 சோம்பலே தீமைக்கும் துன்பத்துக்கும் பிறப்பிடம்.

23 உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவற்ற களஞ்சியம்.

24 கடன்படும் செல்வர்களிலும் கடன்படா வறியவர்களே மிகுந்த சுகம் உடையவர்கள்.

25 பிறருக்கு வரும் கல்வி செல்வங்களைக் காணும்பொழுது பொறாமை இன்றி மகிழ்தலே நன் மனதுக்கு அழகு.

26 நம்மேல் அன்பு இல்லாதவர் மேலும், நாம் அன்பு உள்ளவர்களாயே இருத்தல் வேண்டும்.

27 திரவியம் தேடுவதற்கு முயற்சியே சிறந்த கருவி.

28 செய்நன்றியைக் கொன்றவனுக்கு உய்வில்லை.

29 பாவம் செய்ய ஏவுகின்றவன், செய்கின்றவனோடு சமமாகத் தண்டிக்கப்படுவான்.

30 பொய் கூறலாகிய பாவம் ஒன்றை ஒழிப்பின் அதுவே நெறியாக மற்றப் பாவங்கள் அனைத்தும் தாமே ஒழிந்துவிடும்.

31 எந்த நாட்டையும் எந்த ஊரையும் உன்நாடும் உன் ஊரும் ஆக்குவது கல்வி; ஆதலால் அதனை இளமை தொடுத்து மரண பரியந்தம் விடாமற் கல்.

32 ஆசானுடைய உள்ளத்திலே அருள் வரும்படி நடத்தலே கல்விக்குச் சிறந்த கருவி.

33 அறிவும் அதனால் ஆகிய நற்குண நற்செய்கைகளும் உள்ள சான்றோர்களாலே நன்கு மதிக்கப்படுதற்கு யோக்கியனாய் இரு.

34 நம்முடைய குற்றங்கள் இவைகள் என்று நமக்குத் தெரிவித்து அவைகளை நீக்கி நடக்கும் நெறியை நமக்குப் போதிக்கின்றவர்களே நமக்கு உத்தம சிநேகிதர்கள்.

35 பிறர் உனக்குச் செய்த குற்றங்களினாலே உனக்குக் கோபம் தோன்றும் பொழுது, நீ பிறருக்குச் செய்த குற்றங்களை நினைப்பாயாகில், அது அடங்கிவிடும்

36 தரித்திரனாய் இருக்கும்போது திருப்தி அடையாதவன், செல்வனானபோதும், திருப்தியடையான்; திருப்தியடையாமை மனக்குற்றமேயன்றிப் பொருட்குற்றம் அன்று.

37 அதிக வருத்தத்தோடு உன்னைப் பெற்று வளர்த்த பிதாமாதாக்களை, நீ என்ன

வருத்தப்படினும், மறந்தும், கைவிடாமல், அன்போடு காப்பாற்று.

38 எவ்வகைப்பட்ட பெரிய நன்றிகளைக் கொன்றவனுக்கும் உய்வு உண்டாம்; செய்ந் நன்றியைக் கொன்றவனுக்கு உய்வில்லை.

39 நாம் இரகசியமாகக் குற்றம் செய்யும்போது, பிறர் நம்மைக் கண்டியாவண்ணம் தப்பிக்கொள்வோமாயினும், நம்முடைய மனம் நம்மைக் கண்டியாவண்ணம் தப்பிக் கொள்ள மாட்டோமே.

40 மனத்திருப்தியிலும், சரீராரோக்கியத்திலும் நற்குண நற்செய்கைகளை உடையராய் வாழ்தலிலுமே அன்றி திரவியத்திலே இன்பம் ஜனியாது.

41 நமக்கு நல்லொழுக்கமும், புகழும் இன்பமும் வருதல் தவிர்தல்கள், முறையே பெரும்பான்மையும், நமது நற்சார்பு தீச்சார்புகளால், ஆகும்.

42 தன்பொருட்டு மாத்திரம் பிரயாசப்படுபவன் அற்ப இன்பத்தை மாத்திரமே அனுபவிப்பான்; அவ்வற்ப இன்பமுமோ மிக இழிந்தது.

43 பாவம் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இல்லையாயில், பாவம் செய்பவர்களும் இலர்; ஆதலால் பாவம் செய்பவர்களிலும் அவர்களை மதிப்பவர்களே பெரும் பாவிகள்.

44 காரணம் பற்றியாயினும், அறியாமையால் ஆயினும், ஒருவன் உன்னிடத்துத் தீங்கு செய்தபோது, நீயும் அதனை அவனிடத்துச் செய்யாது பொறுத்துக்கொள்.

45 உன்னால் உன் தாய்தந்தையருக்குக் கிடைத்த உபசாரமே, அது கண்ட உன் பிள்ளைகளால் உனக்கும் கிடைக்கும்.

46 பிரயோசனம் இல்லாத சொற்களைச் சொல்லுவோன், அறிவாகிய உள்ளீடு இல்லாமையால் மனிதருக்குள்ளே பதர் என்று சொல்லப்படுவான்.

47 பிறிதோர் உயிர்க்கு வந்த நோயைத் தனக்கு வந்த நோய்போலக் குறிக்கொண்டு காப்பாற்றுவிடத்து, அறிவினாலே பயன் யாது!

1 கடவுளால் விரும்பப்படுபவைகளாவன இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய்தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம்.

2 கடவுளை வணங்கி, அவருடைய திருவருள் வசப்பட்டு ஒழுகுவோமானால், நாம் தீமைகளினின்று நீங்கி நன்மைகளைச் செய்து தம்மை வழிபட்டு உய்யும்படி அவர் நமக்கு அருள்செய்வார்.

3 ஆன்மாக்களுக்குச் செய்யுந் துரோகத்திலும் கடவுளுக்குச் செய்யுந் துரோகம் மிகக் கொடியது.

4 உலக இன்பத்துக்குக் காரணம் பொருளேயாதல் போலத் தருமத்துக்குக் காரணம் அருளேயாம். அருளெனினும், கருணையெனினும் இரக்கம் எனினும் பொருந்தும்.

5 கொலையில்லாத ஞானமே ஞானம், கொலையில்லாத தவமே தவம், கொலையில்லாத தருமமே தருமம், கொலையில்லாத செல்வமே செல்வம்.

6 பிறவுயிரைக் கொல்லுதல் போலத் தன்னுயிரைக் கொல்லுதலும் பெருங்கொடும் பாவம்.

7 புலால் கொலையினலே கிடைத்தலால், புலால் உண்ணல் கொலைப்பாவத்தின் காரியமாகும்.

8 கொலை செய்தவரும், புலாலை விற்றவரும், புலாலை விலைக்கு வாங்கினவரும், புலாலைப் புசித்தவரும், புலால் புசியாதவரைப் புசிப்பித்தவரும், சிலர் சொல்லுக்கு அஞ்சிப் புலாலைப் புசித்தவருமாகிய எல்லாரும் பாவிகளேயாவர்.

9 கள்ளுண்பவர் தமக்குச் சிநேகர் செய்த நன்மையையும் தாங்கற்ற நூற்பொருளையுஞ் சிந்தியார்.

10 களவினல் வரும் பொருள் வளர்வது போலத் தோன்றி, தான் போம்பொழுது பாவத்தையும் பழியையுமே நிறுத்திவிட்டு, முன்னுள்ள பொருளையும், தருமத்தையும் உடன்கொண்டு போய்விடும்.

11 பிறன் மனையாளை விரும்புவோரிடத்தே தருமமும், புகழும், சிநேகமும் பெருமையும் ஆகிய நான்கும் அடையாவாம்.

12 பொய்சொல்லத் துணிகின்றவன் களவு முதலிய தீமைகளைச் செய்வதற்கு அஞ்சான். பொய் சொல்லலாகிய பாவமொன்றை ஒளிப்பின், அதுவே வழியாக மற்றப் பாவங்களெல்லாம் தாமே ஒழிந்துவிடும்.

13 பொய்ச்சான்று சொன்னவரும், பொய்வழக்குப் பேசினவரும், வழக்கிலே நடுவுநிலைமையின் வழுவித் தீர்ப்புச் செய்தவரும், ஏழுபிறப்பில் ஈட்டிய எல்லாப் புண்ணியங்களையும் கெடுத்தவராவர்.

14 பொறாமை யுடையவனுடைய மனசிலே ஒருபோதும் இன்பமும் அமைவும் உண்டாகா.

15 கோபந் தோன்றுமாயின் மனக்கலக்கம் உண்டாகும். அது உண்டாகவே, அறிவு கெடும். அது கெடவே உயிர்கள்மேல் அருள்

இல்லையாகும். அது இல்லையாகவே அவைக ளுக்குத் துன்பஞ் செய்ய நேரிடும். ஆகையால், கோபத்தை எந்நாளும் அடக்கவேண்டும்.

16 சூதானது தரித்திரத்துக்குத் தூது, பொய்க்கு சகோதரம், களவு, சண்டை முத லிய கீழ்த்தொழில்களுக்கு மாதா, சத்தியத் துக்குச் சத்துரு என்பர் அறிவுடையோர்.

17 தமக்கு ஒரு நன்றி செய்தவர் பின்பு நூறு தீமைகளைச் செய்தாராயினும், மேலோர், அந்நன்றி ஒன்றையுமே உள்ளத் தில் வைத்துத் தீமை நூற்றையும் பொறுப் பர்.

18 எவன் தன்னுடைய தாய் தந்தை முதலிய பந்துக்கள் வறுமையினால் வருந்தும் போது இம்மையிலே புகழின் பொருட்டு அன் னியர்களுக்குத் தானங் கொடுக்கின்றானோ, அத்தானம் தருமமன்று.

19 பசுக்கள் இம்மை மறுமை இரண்டி னும் பயனைத் தரும்.

20 கொடை, வணக்கம், உறவு, கிருபை, பொறை என்னும் ஐந்தும் உடையவனே தாதா. இவையில்லாதவன் அதாதா. அருளும் ஆதரவுமுடையவனாகிய தாதாவின் கையிலே ஏற்றவன் அந்தத் தாதாவினோடும் புண்ணியலோகத்தை அடைவன்.

21 குருடர், முடவர், சிறு குழந்தைகள், தரித்திரர், வியாதியாளர், வயோதிகர் இவர்களும் தானபாத்திரமாவர்.

22 உயர்குலமும் அழகும் செல்வமும் உடையவராயினும், கல்வியில்லாதவர் முருக்கம் பூவுக்குச் சமமாவர்.

23 கல்வியுடையவர் தாங்கற்றறிந்தபடி நல்வழியிலே ஒழுகுதலும், நன்மாணாக்கர்களுக்குக் கல்வி கற்பித்தலும், எல்லாருக்கும் உறுதியைப் போதித்தலுமாகிய இம்மூன்றையும் எந்நாளும் தமக்குக் கடனாகக் கொள்ளல் வேண்டும்.

24 வித்தியாதானத்துக்குச் சமமாகிய தருமம் யாதொன்றுமில்லை. தாங்கற்ற கல்வியை நன்மாணுக்கர்களுக்குக் கருணையோடு கற்பியாதவர் காட்டிலே நச்சு மரமாவர்.

25 பொருள் சம்பாதிக்குமிடத்து, தரும நெறியாலே சம்பாதித்தல் வேண்டும்.

26 இறக்கும்பொழுது செய்வோம் என்று நினையாது புண்ணியத்தை நாடோறும் செய்தல் வேண்டும்.

27 இம்மையிலே மனிதர்கள் அநுபவிக்குந் துன்பங்களெல்லாவற்றினும், கடனால் உண்டாகும் துன்பத்தின் மிக்க துன்பம் யாதொன்றும் இல்லை.

28. இல்வாழ்வானே மற்றையெல்லா வாச்சிரமத்தாருக்கும் ஆதாரமானவன். ஆதலால் தரும நிலையும், உலகநிலையும் இல்லறத்திற்றனே உண்டாகுகின்றன.

29 தகப்பன், தாய், பெரியதகப்பன், சிறிய தகப்பன், பெரியதாய், சிறியதாய், பாட்டன்,

பாட்டி, மாமன், மாமி, தமையன், தமையன் மனைவி, குரு, குருபத்தினி, உபாத்தியாயர் முதலிய பெரியோர்கள் வந்தால், இருக்கை விட்டெழுந்து வந்தனஞ் செய்தல் வேண்டும்.

30 அமாவாசை, பௌர்ணிமை முதலிய விசேஷ தினங்களிலே, தேவாலயத்தையும், பிதா, மாதா, குரு, உபாத்தியாயர் முதலிய பெரியோர்களையும் தரிசித்தல் வேண்டும்.

31 அட்டமி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணிமை, மாசப்பிறப்பு, என்னும் பஞ்ச பருவங்களிலும், பிரதமை, சஷ்டி, துவாதசிகளிலும், உத்தரம், திருவோணம், திருவாதிரை, கேட்டை என்னும் நக்ஷத்திரங்களிலும், சன்ம நக்ஷத்திரத்திலும், விதிபாதயோகத்திலும், இரவிலும் எண்ணெய் தேய்த்துக் கொள்ளலாகாது. எண்ணெய் தேய்த்துக் கொள்வதற்கு ஆடவர்களுக்குப் புதன்கிழமையும், சனிக்கிழமையும் நல்லனவாம். பெண்களுக்குச் செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக்கிழமையும் நல்லனவாம்.

32. க்ஷௌரஞ் செய்து கொள்வதற்குத் திங்கட்கிழமையும், புதன்கிழமையும் உத்தமம். வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் மத்திமம்.

33. பெரியோர் நித்திரை செய்யும்போது அவரை எழுப்பலாகாது. பசுவானது தண்ணீர் குடிக்கும் போதும், புல்லுத் தின்னும் போதும், கன்று பால் குடிக்கும்போதும் தடைசெய்யலாகாது.

34 பெரியோர்களும், வயோதிபர்களும், சுமைசுமப்போர்களும், வியாதியாளர்களும், பிள்ளைகளும், பசுக்களும், பெண்களும் எதிர்ப்பட்டால் அவர்களுக்கு வழி கொடுத்து, விலகிப் போதல் வேண்டும்.

35 வாயை மூடிக்கொள்ளாமற் கொட்டாவி விடுதலும், பெருமூச் செறிதலும், இருமுதலும் ஆகாவாம்.

36 மனைவியானவள் தன்னுடைய பிதா மாதாச் சகோதரர் முதலிய சுற்றத்தார்கள்

எல்லாரிடத்திலும் பார்க்கத் தன்னுயகனிடத்தே மிக்க அன்புவைத்து ஒழுகல் வேண்டும்.

37 நாடோறும் சூரியோதயத்துக்கு முன்னே விழித்தெழுந்தால், புத்தி தெளிவடையும்; நரம்புத்துவாரத்து நீர் சுத்தியுறும்; பித்தம் நீங்கும்; வாதபித்தங்கள் தத்தநிலையைப் பொருந்தும்.

39 காலையிலே சிலம்பமேனும், குதிரையேற்றமேனும், கால்நடையேனுஞ் செய்து கொண்டுவந்தால் சரீரம் இறுகும்; பசி உண்டாகும்; வாதமும் கபமும் வலியும் சூலையும் நீங்கும்; மலம் இறங்கும்.

39 ஸ்நானத்துக்குப் பிராதக் காலமே உத்தமகாலம். பிராதஸ்நானஞ் செய்தால், பசி உண்டாகும்; நோய் அணுகாது. வெந்நீரிலே செய்யும் ஸ்நானத்தைப் பார்க்கினும், தண்ணீரிலே செய்யும் ஸ்நானமே உடம்புக்கு அதிக உறுதியைத் தரும்.

40 குனிந்த நிலையினும் நிமிர்ந்த நிலையே ஆரோக்கியத்தை விளைவிக்கும். ஆதலினால், இருக்கும்போதும், நிற்கும்போதும், நடக்கும் போதும், வேலை செய்யும்போதும், சரீரம் குனிந்த நிலையின்றி நிமிர்ந்த நிலையுடைய தாயே இருத்தல் வேண்டும்.

41 காலந்தோறும் போசனம் ஒழுங்காகச் செய்துவருதல் போலவே சரீரமுயற்சியும் ஒழுங்காகச் செய்துவரல் வேண்டும்.

42 மனமும் சரீரமும் தாஞ்செய்த முயற்சியளவுக் கேற்ப இளைப்பாறல் வேண்டும். மனதையும் சரீரத்தையும் இளைப்பாற்றுவது நித்திரை. நித்திரைக்கு ஏற்ற காலம் இராக்காலமேயாம்.

43 பகல் நித்திரையானது பதினெட்டு வித வாதரோகங்களை விளைவிப்பதற்கு ஒரு வித்தாகும்.

44 வாரத்துக்கு இரண்டுதரமாயினும், ஒருதரமாயினும் எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்தல் வேண்டும்.

45 எண்ணெயைக் கால்களில் இட்டாற் கண்ணோய் நீங்கும்; கண்களில் இட்டாற் காது நோய் நீங்கும்; காதுகளில் இட்டால் தலை நோய் நீங்கும்; தலையில் இட்டால் எல்லா நோயும் நீங்கும்.

46 ஞான நூல்களைப் படிப்பவருக்கும், படிப்பிப்பவருக்கும் அன்னதான முதலிய தானஞ் செய்தலின் மிக்க தருமம் பிறிதொன்றுமில்லை.

47 தேவாலயக் கிரியைகள் காலந்தோறும் தவறாமற் சிரத்தையோடு செய்யப்படுமாயின், உலகத்திலே காலந்தோறும் மழை தவறாமற் பெய்யும்.

48 சனங்களுக்குப் பக்தி வளர்ந்தோங்கும் பொருட்டு, தேவாலயமெங்கும் வேத

வொலியும் தமிழ்வேத வொலியுமே தழைத்தோங்கும்படி செய்தல் வேண்டும். சைவர்களுக்குத் தமிழ் வேதம் தேவார திருவாசகங்கள். வைஷ்ணவருக்குத் தமிழ்வேதம் நாலாயிரப் பிரபந்தம்.

49 திருக்கோயிலும் திருமடமும் சமத்துவமுடையவை.

50 புராணங்களை நியமமாக விதிப்படி படித்தலும், அவைகளுக்குப் பொருள் சொல்லலும், கேட்டலும் சிறந்த புண்ணியங்களாம்.

தயாரித்தவர்:

க. சி. குலரத்தினம்

— ❋ —

# திருநீறு

சைவசமயிகள் சரீரத்திலே அவசியமாகத் தரிக்க வேண்டிய அடையாளம் விபூதி. விபூதியாவது பசுவின் சாணத்தை அக்கினியினாலே சுடுதலால் உண்டாகிய திருநீறு. விபூதியின் வேறு பெயர்கள் திருநீறு, பசிதம், பசுமம், க்ஷாரம், இரக்ஷை என்பனவாம். திருநீறு மேலான செல்வம் எனப்படுவது. சிவபெருமான் திருநீற்றினை நிறையப் பூசுபவர். நாம் வெண்ணிறத் திருநீற்றையே பூசுதல் வேண்டும். வெண்ணீறு அணிதலால் எமக்குப் பெருமையும், பேறும், காவலும், அழகும் உண்டாகும். திருநீற்றை நிலத்திலே சிந்தாவண்ணம் வடக்கு அல்லது கிழக்குத் திசை நோக்கி நின்று சிவசிவ என்று கூறித் தரித்தல் வேண்டும்.

திருநீற்றை வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் தரித்தல் வேண்டும். நித்திரை செய்யப் புகும் போதும், நித்திரைவிட் டெழுந்தவுடனும், தந்த சுத்தி செய்தவுடனும், சூரியன் உதிக்கும்போதும், அத்தமிக்கும்போதும், ஸ்நானஞ் செய்தவுடனும், போசனத்துக்கு முன்னும், போசனத்துக்குப் பின்னும் திருநீறு ஆவசியமாகத் தரித்துக் கொள்ளல் வேண்டும்.

மரச்சாம்பல், உமிச்சாம்பல், மக்கி, மண் முதலியவற்றைத் தரித்தலால் மகிமை இல்லை. நல்ல திருநீற்றை நாமே சிரமமின்றி வீட்டில் செய்துகொள்ளுதல் மிகவும் நல்லது. பசுவின் சாணத்தை நீர் விட்டுப் பிசைந்து வராட்டியாகத் தட்டி வெயிலிலே காயவிட்டு உமியிலேனும், சப்பட்டையிலேனும் இட்டு நன்றாகச் சுட்டு அது வெண்ணீறாக வெந்து நீறிச் சூடு தணிந்தபின் நீரிலிட்டுப் பிசைந்து வடித்து வில்லையாக உருட்டி வெயிலிலே காயவிட்டு உலர்ந்த பின் புதுப்பாண்டத்தினுள்ளே இட்டு மல்லிகை, முல்லை முதலிய நறுமணமுள்ள மலர்களை அதனுள்ளே போட்டுப் புதுத்துணியினாலே அதன் வாயை மூடிக் கட்டிவைத்துக் கொள்ளலாம். வேண்டியபோது பட்டுப் பையிலேனும், சம்புடத்திலேனும், வில்வக் குடுக்கையிலேனும் எடுத்து வைத்துக்கொண்டு தரித்தல் வேண்டும். பசுப்பால் விட்டுப் பிசைந்து உருட்டிக் காயவிடுவதால் திருநீறு மேலும் பரிசுத்தம் அடையும்.

— ❋ —

ஒரே செலவில் நமக்கும் பிறர்க்கும்
நயம்வர வாய்ப்பான வழியை
நாடுதல் உத்தமமல்லவா?

நாடு நலம்பெற நாம் நற்சேவை செய்ய
எமது உற்பத்திப் பொருள்களை
வாங்கி உபயோகியுங்கள்.

வணக்கம்.

---

- மில்க்வைற் நீலசோப் ○ நியூ மில்க்வைற் சோப்
- மில்க்வைற் 30 சதம் சோப், *15* சதம் சோப்
- மில்க்வைற் பார் சோப் ○ மில்க்வைற் சலவைப் பவுடர்
- மில்க்வைற் மெடிக்கேட்டற் சோப்
- நீம் வாசனை சோப் (வேப்பெண்ணை கலந்தது)

*வாங்கிப் பாவித்து அதிக லாபம் அடையுங்கள்.*

---

# மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233 தந்தி: "மில்க்வைற்"

கிளை: 79, மெசென்ஜர் வீதி, கொழும்பு-12

தொலைபேசி: 36063

---

*சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.*